# விடுதலைப் புலிகளின் இழிசெயல்: ராஜீவ் கொலைக்கு புதிய ஜனநாயகம் - புதிய கலாச்சாரம் மீது வீண்பழி!

ராஜீவ் காந்தி கொலைக்கான "பழி"யை புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய பத்திரிக்கைகள் மீதும் அவற்றைச் சார்ந்த புரட்சியாளர்கள் - அமைப்புக்கள் மீதும் சுமத்தும் வெட்கக்கேடான இழிசெயலில் விடுதலைப் புலிகள் இறங்கியுள்ளனர். விடுதலைப் போராளிகளுக்குரிய தகுதியையும் மரியாதையையும் அவர்கள் இழந்து போவதைத்தான் இது குறிக்கிறது.

குண்டு வெடிப்பில் ராஜீவ் கொல்லப்பட்ட நாளில் இருந்து பலரது கவனமும் சந்தேகமும் ஈழ விடுதலைப் புலிகள் மீதுதான் குவிந்தது. தாங்கள் அதைச் செய்யவில்லை என மறுத்ததோடு புலிகள் நிற்கவில்லை. இலங்கை அரசோ, ஈழ துரோகக் குழுக்களோ, இந்திய இராணுவத்தால் பாதிப்புக்குள்ளான பெண்ணோ ராஜீவைக் கொன்றிருக்கலாம் என்று லண்டனில் உள்ள புலிகளின் அதிகாரப் பூர்வ அறிவிப்பாளர் கிட்டு கூறினார். இந்தியாவில் அரசமைப்புக்குப் பகைமையாக உள்ள பல சக்திகளில் ஏதாவது செய்திருக்கலாம் என்று யாழ்பாணத்தில் பேட்டியளித்தனர் புலிகளின் அரசியல் பிரமுகர்களான ஆண்டன் பாலசிங்கமும், யோகியும். கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதில் தாங்களும் உதவுவதாக முன்வந்தார் கிட்டு.

ஜூன் 11ந் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் - தினமணி நிருபருடன் லண்டனில் இருந்து தொலைபேசியில் பேட்டி கொடுத்த கிட்டு பின்வருமாறு கூறியுள்ளார். "தமிழ்நாட்டில் சில தீவிரவாதக் குழுக்கள் செயல்படுகின்றன. அவை அதிகாரப் பூர்வ பத்திரிக்கைகள் கூட நடத்துகின்றன. புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய அத்தீவிரவாதப் பத்திரிக்கைகள் லண்டனில் கூட விநியோகிக்கப் படுகின்றன. ராஜீவின் கொலைகாரன் என்று சந்தேகிக்கப்படும் "குர்தா" அணிந்த ஆசாமி அந்தப் பத்திரிக்கைகளின் நிருபர்களில் ஒருவராக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த ஆள் இலங்கைக்காரன் போலத் தெரியவில்லை; பரிச்சயமானதாகவும் அவன் முகம் இல்லை. கொலைகாரியான கருத்தப் பெண் யாழ்ப்பான பாணியில் தலையலங்காரம் செய்திருந்தாலும் வேண்டுமென்றே அப்படிச் செய்திருக்க வேண்டும். மற்றபடி அவள் தமிழ் நாட்டுப் பெண் போலத்தான் தெரிகிறாள்" என்று கிட்டு தனது பேட்டியில்.கூறியுள்ளார்.

கிட்டுவின் பேட்டி பகுத்தறிவு நாடகமாடும் - புலிகளின் துதிபாடும் தி.க. "விடுதலை" உட்பட வேறு சில தமிழ் நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. ஆனால், அது வெளியான அன்றிலிருந்து ராஜீவ் கொலையில் ஈழத் தமிழர் சிலரோடு சம்பந்தப்பட்டிருப்பதாக சென்னைவாசிகள் சிலரைக் கைது செய்வது தொடருகிறது. அது வேறு விசயம்.

இதுபோன்று வீண்பழி - அவதூறு சுமத்தப்படுவதும், தாக்கப்படுவதும் நமது அமைப்புக்கும் தோழர்களுக்கும் புதிதல்ல. அரியலூர் - மருதையாற்று பாலம் குண்டு வெடிப்பு - ரயில் கவிழ்ப்பு, திருவையாறு பாலம் குண்டுவெடிப்பு, திருச்சி - நேரு சிலையும் தஞ்சை நினைவுச் சின்னமும் தகர்ப்பு, பட்டுக்கோட்டை வட்டாரத்தில் வாகனங்களுக்குத் தீவைப்பு ஆகியனவற்றிலும் இவ்வாறு நடந்துள்ளது. நமது தோழர்கள் இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்படவில்லை என்று தெரிந்து, அவர்கள் சந்தேகிக்கும் நபர்களைக் காட்டிக் கொடுக்கும்படி நிர்பந்தித்து, துன்புறுத்தியபோது நமது தோழர்கள் மறுத்தே வந்திருக்கிறார்கள்.

ஆனால், விடுதலைக்குப் போராடு
தாகக் கூறும் புலிகள் ஏன் இத்தகைய இழி
யலில் ஈடுபட வேண்டும்? அவர்கள
பாசிச அரசியலும், அதை நாம் விமர்சித்
வருவதும் தான் காரணம். புலிகளின் இச்
யல் குறித்து நாம் வருந்தவோ அஞ்சவோ
போவதில்லை. உண்மையில் நமக்கு அதி
சியூட்டுவது என்னவென்றால், தீங்கள
மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்க
எனக் கூறிக்கொண்டு புலிகளை ஆதரித்
வரும் இங்குள்ள சிலர் அவதூறை ஏதாவ
ஒரு வகையில் நியாயப் படுத்துவதுதா
இறுதியில் நேர்மையான, புரட்சிகர அர
யலே வெல்லும்; இத்தகைய அவதூறுகளு
சதிகளும் வெல்ல முடியாது என்ற நம்பி
கையோடு நமது பணியைத் தொடருவோ

— ஆசிரியர் கு

## தமிழக நாளேடுகளுக்குத் தரப்பட்ட மறுப்பு அறிக்கை

இன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் (12.6.91) நாளேட்டில், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிட்டு அவர்கள் கூறியதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்படும் குர்தா அணிந்த நபர் "புதிய கலாச்சாரம்" அல்லது "புதிய ஜனநாயகம்" பத்திரிகைகளைச் சேர்ந்த செய்தியாளராக இருக்கக்கூடும் என்று கிட்டு அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கிட்டுவின் கூற்றை நாங்கள் வன்மையாக மறுக்கிறோம். ராஜீவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளையும், இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்பியதையும் நாங்கள் எதிர்த்தோம்; எதிர்க்கின்றோம். ஆனால், தனிநபர் கொலைகளின் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. கிட்டு குறிப்பிட்டுள்ளதைப் போல எங்களது நபர்கள் யாரும் செய்தி சேகரிக்கும் நோக்கத்துக்காகக் கூட ஸ்ரீபெரும்புதூர் செல்லவில்லை. அத்தகைய தோற்றம் கொண்ட நபர்களும் எம்மிடம் யாருமில்லை. இருப்பினும் எமது பத்திரிகைகளுக்கு எதிராக கிட்டு உள்நோக்கத்துடன் அவதூறு செய்துள்ளார்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முற்றிலும் சரியானதென்று ஆதரிக்கும் அதே சமயம், ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, பிளாட் போன்ற இந்திய அரசு ஆதரவு அமைப்
களின் துரோகத்தையும், விடுதலைப் புலி
களின் பாசிச நடவடிக்கைகளையு
தொடர்ந்து எமது பத்திரிகைகளி
எதிர்த்து எழுதி வருகிறோம்.

குறிப்பாக, புலிகள் ஈழ விடுதலை
காகப் போராடும் சிறிய ஜனநாய
அமைப்புகளைத் தடை செய்து ஒடுக்
கின்றனர். சிங்கள சிவிலியன்களையும்,
ஈழ முஸ்லீம்களையும் கொலை செய்கி
றனர்; ஈழ முஸ்லீம் மக்களை ஈழத்தி
ருந்து விரட்டியடிக்கின்றனர். ராஜனி தி
ணகம போன்ற ஜனநாயக சக்திகளை
கொலை செய்கின்றனர். புலிகளின் இத்
கைய பாசிச நடவடிக்கைகளை துவக்க
தலே நாங்கள் எதிர்த்து வருகிறோம். உ
கம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்க
மத்தியில் எமது பத்திரிகைகள் பெரு
ஆதரவு பெற்றுள்ளன. இதனால் ஆத்தி
முற்று எமது வாசகர்களையும், புலிகளு
டன் உடன்படாத ஈழ அகதிகளையு
வெளிநாடுகளில் கூட புலிகள் தாக்குகி
றனர்; மிரட்டுகின்றனர்.

ஏற்கனவே "புதிய கலாச்சாரம்"
"புதிய ஜனநாயகம்" ஏடுகள் மீது ஆத்தி
ரம் கொண்டுள்ள கிட்டு, இப்போது
ராஜீவ் கொலையுடன் எம்மைச் சம்பந்த
படுத்திப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறா
முழுவதும் உள்நோக்கம் கொண்ட கிட்டு
வின் கூற்றை வன்மையாகக் கண்டிக்கி
றோம்.